# Centre Tamoul d'Enseignements en France

# பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையம்

## தமிழ்ப் பேச்சுப் போட்டி - 2022

15 வயதுக்கு மேற்பட்டவர்கள்

---

## தாய்மொழிக் கல்வி

மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்றாக விளங்குவது தமிழ்மொழி. அதுவே எனது தாய்மொழி. முத்தமிழ் எனப் போற்றப்படும் தமிழ், "த" என்ற வல்லினத்தை எடுத்து "மி" என்ற மெல்லினத்தைச் சேர்த்து "ழ்" என்ற இடையினத்தைக் கோர்த்து "தமிழ்" எனச் சிறப்பிக்கப்படுகிறது. "தமிழ்மொழியைக் கற்றால்தான் தமிழனாக வாழ்ந்திடலாம்" அதனால் என் தாய்மொழி தமிழைக் கற்பது மிக அவசியம். என்னை தாலாட்டி தூங்கவைக்க தாய் பாடிய மொழி. எனக்கு பாலூட்டியபோது, சீராட்டியபோது, அமுதூட்டிய போதெல்லாம் சேர்த்தூட்டிய மொழியை நான் கற்றிட வேண்டாமா?

மொழி ஒரு மனிதனை இனங்காட்டும். மொழி மனிதனின் உயிர்நாடி. மனிதன் குழந்தைப் பருவம் முதலே கற்றுக் கொண்டதும், சிந்திக்கவும், கருத்துப் பரிமாறவும் உதவும் மொழி எதுவோ அதுவே அவனுக்கு தாய்மொழி. தனது குடும்பத்திலும் குடும்பத்தைச் சார்ந்த சமூகத்திலும் தாய்மொழியைப் பேசும், கற்கும் பிள்ளை புலம்பெயர் வாழ்விலும் பெற்றோருடனும் தனது சமுதாயத்துடனும் முரண்பாடு இல்லாமல் வாழும். தாய்மொழிக் கல்வியில் பூரண அறிவைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகளினால்தான் மற்ற மொழிகளிலும் பூரண அறிவையும், விளக்கங்களையும் பெறமுடியும். தனது தாயகம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தனது வேரை அறிந்துகொள்ளும் தாய்மொழியறிவு ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கு மிக முக்கியமாகும்.

மேலும் தனது தாயகம், பண்பாடு, கலாச்சாரத்தையும் அறியாத ஒருவனுக்கு மற்றையோரின் தாயகத்தையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் முழுமையாக அறியமுடியாது. சிந்தனை மொழி தாய்மொழியாக இருக்கும் பிள்ளை, தன் வாழிட மொழியில் அதிகூடிய கற்றல்திறனைக் கொண்டவனாக இருக்கிறான் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. மற்றும் எவனொருவன் தாய்மொழிக் கல்வியை ஐயம் திரிபறக் கற்றுக் கொள்கிறானோ அவன் ஏனையை மொழிகளை மிகவும் இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியும் என்று விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

எனவே ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வியை கற்பிக்கவேண்டும். புலம்பெயர் நாடுகளில் வாழும் அடுத்த தலைமுறை தமிழை அறிந்தவர்களாக, தமிழர்களாக இருக்கவேண்டுமென விரும்பினால் பெற்றோர்கள் தம் குழந்தைகள் தமிழ் கல்வி பெறுவதற்கான பணிகளைப் புரியவேண்டும். அல்லாதுபோனால் எம் எதிர்கால தலைமுறை மொழி மாறி, இனம் மாறி தம் தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்படும். காலத்தின் தேவை கருதி அடுத்த தலைமுறையினருக்கும் தமிழ்க் கல்வியை வழங்கி அவர்களை தமிழர்களாக வாழவைக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு என்று உணர்ந்து நம் குழந்தைகளுக்கு தாய்மொழிக் கல்வியை வழங்கவேண்டும்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்றார் பாரதியார். அத்தகைய சிறப்புமிக்க தாய்மொழி தமிழை ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் விரும்பிக் கற்பதற்கு அரும்பாடுபட வேண்டும். அதற்காக அயராது உழைக்க வேண்டும். தாய்மொழியைக் காப்பது ஒவ்வொருவரதும் வரலாற்றுக் கடமையாகும். தாய்மொழியாம் தமிழைக் கற்போம்! தமிழனாய் வாழ்வோம்!!

நன்றி